21/7/70

University of Jaffna Sri Lanka
RECEIVED
7 - 8
Periodicals Division
Library

# தந்தி

இல: 1085 1970 ஜூலை 19 ஞாயிற்றுக்கிழமை ★ விலை சதம் 5

## புதிய திட்டம் அமுலுக்கு வரும் வரை

# நாளை முதல் ஆசிரியர் இடமாற்றம் நிகழாது

## கல்வி அமைச்சு தீர்மானம்

**நாளை முதல் ஆசிரியர்கள் இடமாற்றம் செய்யப்பட மாட்டார்கள். புதிய இடமாற்றத் திட்டம் ஒன்று உருவாக்கப்பட்டு, அது அமுலுக்கு வரும் வரை ஆசிரியர்களுக்கு இடமாற்றம் வழங்குவதில்லை என்று கல்வி அமைச்சு தீர்மானித்து இருக்கிறதாம்.**

இதற்கிடையில் அரசியல் காரணங்களுக்காக தண்டிக்கப்பட்டோ அல்லது இடமாற்றம் செய்யப்பட்டோ கஷ்டத்துக்குள்ளாகி கஷ்ட நிவாரணம் பெறத் தவறிய ஆசிரியர்கள் நாளை 20-ம் திகதிக்கு முன் கல்வி அமைச்சுக்கு அறிவிக்க வேண்டும்.

கஷ்ட நிவாரணம் பெறத் தவறியவர்கள் விஷயம் உடன் கவனிக்கப்படும் எனத் தெரிகிறது.

இதேவேளையில் கஷ்டத்துக்குள்ளான ஆசிரியர்களுக்கு கஷ்ட நிவாரணம் அளிக்கப்பட்டுவிட்டபடியால், 15-ம் திகதியிலிருந்து இடமாற்றம் சம்பந்தமாக கல்வி அமைச்சரோ, உதவி அமைச்சரோ எவருக்கும் பேட்டியளிக்க மாட்டார்கள் என்று அமைச்சரின் காரியாலய வாசலில் அறிவித்தல் ஒன்று ஒட்டப்பட்டுள்ளது. (க)

## மீனாட்சி



என்னுங்க, கொழும்பு ஸ்டேஷனில் இரவில் ஒரு டாக்ஸி பிடிக்க முடியாதிருக்கின்றதே?

ஆமாங்க, அங்கு ரெயில் வரும்போது வரிசையாக நிற்கும் டாக்ஸிக்காரரர் தூரத்து இடங்களுக்குத்தானும் ஆட்களை ஏற்றுவார்கள்!

## வண. நைல்ஸ் இந்தியாவில் காலமானர்

இலங்கை மெதடிஸ்த திருச்சபையின் தலைவரான வண. டாக்டர் டி. ரி. நைல்ஸ், தென்னிந்தியாவில் உள்ள வேலூரில் காலமானர். இறக்கும் பொழுது இவருக்கு வயது அறுபத்திரண்டு.

காலஞ் சென்ற வண. நைல்ஸின் இறுதிச் சடங்குகள் நாளை (திங்கட்கிழமை) வேலூரில் நடைபெறுகின்றன. இதனை முன்னிட்டு, நாளை பிற்பகல் ஐந்து மணிக்கு கொள்ளுப்பிட்டி மெதடிஸ்த சபையில் ஞாபகார்த்தப் பிரார்த்தனை ஒன்று நடைபெற

(க)


## நஷ்டஈடு வழங்கப்படும்?

பாலாவியில் நிகழ்ந்த கோர ரயில் — பஸ் விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு அரசாங்கம் நஷ்டஈடு வழங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இவ் விபத்தில் இறந்தவர்களின் மரணச் சடங்கிற்கான செலவுகளை இலங்கைப் போக்குவரத்துச் சபை வழங்க முடிவு செய்துள்ளது.

(க)

## ஏன் இந்தக் கோலமோ?



கா... ...டை அணிந்து இங்கு காணப்படுவது பிரித்தானிய மகாராணி எலிசபெத் ஆவார். கொசுக்கடி தாங்க முடியாததால் மகாராணியார் நீண்ட கால் சட்டை அணிந்தார் என்றால் நம்ப முடியுமா? ஆனல் இது தான் உண்மை!

...ண்மையில் கனடாவுக்கு ...ஜயம் செய்த இராச குடும்பத்தினர் வட மேற்கு மலைப் பகுதிக்கு விஜயம் செய்த போது நாட்டு மக்களால் அன்புடன் வரவேற்கப்பட்டனர். ஆனல் கொசு... தொல்லை கொ...

## நாட்டைக் காக்கும்பொருட்டு வீட்டை வழங்கினர் டாக்டர்

நாட்டைக் காக்கும் நிதிக்காக, தனது வீட்டையே வழங்கினர் ஒரு டாக்டர். மீரிகமத்தைச் சேர்ந்த டாக்டர் பி. வி. டி. பெர்னண்டோ என்பவரே நாட்டுக்காக வீட்டைத் தானம் செய்தவராவார்.

நீர்கொழும்பு, கடற்கரை வீதியில் உள்ள தமக்குச் சொந்தமான 45-ம் இலக்க இல்லத்தை, நாட்டைக் காக்கும் நிதி உதவிக்காக வழங்கியுள்ளதாக அவர் பிரதமருக்கு எழுதியிருக்கும் கடிதத்தில் குறிப்பிட்டிருக்கிறர்.

தற்போது மீன்பிடிக் கூட்டுத்தாபனம் இந்த வீட்டை வாடகைக்கு எடுத்திருக்கிறது. வாடகைப் பணமாக, கூட்டுத்தாபனம் மாதந்தோறும் 200 ரூபாவாக செலுத்தி வருவதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இந்த வீட்டை, மிக விரைவில் டாக்டர் பெர்னண்டோவிடம் இருந்து கொழும்பு அரசாங்க அதிபர் கையேற்பார் எனத் தெரிய வருகிறது. (க)

## இன்று ஆராய்வர்

வட மாகாண பொலீஸ் சுப்ரிண்டன் திரு. ஆர். சுந்தரலிங்கத்தை கொழும்புக்கு வரும்படி அட்டோர்னி ஜெனரல் அழைத்திருக்கிறர். மாவிட்டபுரம் ஆலயப் பிரச்சினை சம்பந்தமாக இன்று ஆராய்வதற்கென்றே இந்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காதல் கொண்டிருந்தார் என்பது உண்மை

# இளம்பெண்தான் இந்த இளைஞனைக் கடத்தினார்

### பெண் கடத்து வழக்கில் வழக்கறிஞர் விளக்கம்

"எனது கட்சிக்காரர் மனுதாரரான இளம் பெண் மீது ஆழ்ந்த காதல் கொண்டிருந்தார் என்பது உண்மை. சம்பவம் நடந்த அன்று, அந்த இளம் பெண்தான் என் கட்சிக்காரரைக் கூட்டிக் கொண்டு போனாரே தவிர, இவர் அந்தப் பெண்ணைக் கூட்டிச் செல்லவில்லை."

கொழும்பு தெற்கு நீதவான் திரு. [illegible]லின் மெண்டிஸ் முன்னிலையில் விசாரிக்கப்பட்ட ஒரு வழக்கில் எதிரிதரப்பு வழக்கறிஞர் திரு. குவின்டின் பெரேரா மே[illegible]கண்டவாறு கூறினார்.

மைனர் பெண்ணை செல்வி [illegible]ணியைக் கடத்திச் சென்றதாக ஆரியதாஸ (22 வயது) இவ்வழக்கில் குற்றம் சாட்டப்பட்டுள்ளார்.

வழக்கறிஞர் திரு. குவின்டின் பெரேரா மேலும் தெரிவித்ததாவது:—

"எதிரி இந்தப் பெண்ணின் மீது காதல் கொண்டுள்ளார். அன்று இரவு அப் பெண்ணின் வீட்டுக்குப் போய், காதலர் இருவரும் கருத்தொருமித்து இருந்தனர். குசுகுசு சத்தம் கேட்ட பெண்ணின் தாய் எழுந்துவிடவே, அப் பெண் எதிரியையும் கூட்டிக் கொண்டு போய் வெளியே இருந்த குடிசையில் ஒளித்தனர். அங்குதான் அவர்களைப் பொலீசார் பிடித்தனர்" என்று கூறினார்.

"எதிரிதரப்பு வாதம் வேறாக இருக்கிறது. பெண்ணின் தாயார் செய்த புகாரின் மீது தேடிய பொழுது, அங்குள்ள குடிசையில் காதலர் இருவரும் இருக்கக் கண்டோம்" என்று பொலீஸ் இன்ஸ்பெக்டர் கூறினார்.

எதிரிதான் தன்னைக் கடத்தினார் என அப் பெண் கூறினாள்.

தான் முன்பு கூறியதை ருசுப் படுத்த சாட்சியங்கள் உண்டு என எதிரிதரப்பு வழக்கறிஞர் கூறினார். வழக்கை செப்டம்பர் 6-ந் திகதி வரை நீதவான் ஒத்தி வைத்தார். (ஐ-15)

### பொலீஸாரைக் காடையர் கடுமையாகத் தாக்கினர்

கடமையில் ஈடுபட்டிருந்த பொலீஸ் கான்ஸ்டபிள்கள் இருவர் காடையர்கள் மூவரால் கடுமையாகத் தாக்கப்பட்டனர்.

அம்பலாங்கொட ரயில் நிலையத்தில் இரு கோஷ்டியினருக்கு இடையே மூண்ட ஒரு கைகலப்பை நிறுத்தச் சென்ற கான்ஸ்டபிள்கள் இக் கடும் தாக்குதலுக்குள்ளானவர்கள் ஆவர்.

அம்பலாங்கொட பொலீஸ் தலைமைக் காரியாலய இன்ஸ்பெக்டர் திரு. சமரக்கோன் தலைமையில் சென்ற பொலீஸ் கோஷ்டி ஒன்று ரயில்நிலையத்தில் அமைதியை நிலைநாட்டியது.

கடும் பிரயாசையின் பின்னர் அமைதியை நிலைநாட்டிய பொலீஸ் கோஷ்டி மூவரைக் கைதுசெய்து உள்ளது.

இக் கைகலப்பில் காயமடைந்த அம்பலங்கொடை பொலீசைச் சேர்ந்த கான்ஸ்டபிள்களான் ஜினதாச, விஜயதாச ஆகிய இருவரும் தற்போது சிகிச்சை பெற்று வருகின்றனர்.

சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட மூவருள் ஒருவர் பலப்பிட்டிய மாஜிஸ்திரேட் திரு. எஸ். யோகநாதன் முன் ஆஜர் செய்யப்பட்டார். மாஜிஸ்திரேட் அவரை தொடர்ந்து இம்மாதம் 21-ம் திகதிவரை ரிமாண்டில் வைக்கும்படி உத்தரவிட்டுள்ளார்.

மற்றைய இரு சந்தேக நபர்களும் கைகலப்பின் போது தாக்குதலுக்கு உள்ளானமையால் பலப்பிட்டி ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகிறார்கள்.

### மதம் பற்றிய பிரச்சினை எழுந்து குடும்பத்தில் பிளவு

"எனது மதக் கடமைகளை நிறைவேற்ற என் கணவர் என்னை அனுமதிக்காத படியால், என் வாழ்க்கையில் சந்தோஷமில்லை"

மாதம்பை, பழைய நகரைச் சேர்ந்த, 36 வயதான எல்லாதுர மேரி மொனிக்கா, அந்தோனி மேற் கண்டவாறு சாட்சியமளித்தார். இவர் மோதரை விஸ்ட் பசேஜைச் சேர்ந்த ஜி. பி. பன்குருஷியஸ் அந்தோனியிடமிருந்து விவாகரத்து கோரியிருந்தார்.

வழக்கை விசாரித்த கொழும்பு மாவட்ட நீதிபதி திரு. ஜே. எவ். ஏ. சூஸா விவாகரத்து வழங்கி தீர்ப்பளித்தார்.

மொனிக்கா அந்தோனி சாட்சியமளிக்கையில் கூறியதாவது:—

"1956 ஜூன் 14-ல் திருமணஞ் செய்து, 4 பிள்ளைகளும் உள்ளனர். திருமணத்தின் பின் அவரின் பெற்றோர் வீட்டில், மோதரையில் வசித்தோம். கணவரின் பெற்றோர் என் வாழ்க்கையில் குறுக்கிட்டனர். எனது கணவர் மதத்தைப் பற்றி கவலைப்படுவதில்லை. தேவாலய பூசை முதலியவற்றுக்கு போக என்னை அனுமதிப்பதில்லை.

"சில காலத்தின் பின் குடிக்கத் தொடங்கி, என்னை அடித்துத் துன்புறுத்த முற்பட்டார். 1967 மார்ச் 15-ல் கணவர் அடித்ததனால் என் தலையில் பலத்த காயம் ஏற்பட்டு பெரியாஸ்பத்திரியில் இருந்தேன்.

"முன்பு ஒருமுறை விவகாரத்து வழக்கு தாக்கல் செய்தேன். ஆனால் கணவரின் வேண்டுகோளுக்கு இணங்க வழக்கை வாபஸ் வாங்கி, ஒன்றாக இருந்தோம். ஆனால் பழையபடி அவர் என்னை அடித்துத் துன்புறுத்தினார். 1969 மார்ச் 14-ல் அடித்து வீட்டை விட்டுத் துரத்தினார்" என்று கூறினார்.

விவாகரத்து வழங்கிய நீதவான் இரு பிள்ளைகளுக்கும் மாதம் ரூ. 100 வழங்கும்படி தீர்ப்பளித்தார். (ஐ-15)

### 'இரவில் வந்த இளம் பெண் வீட்டில் தங்க இடம் கேட்டார்'

"ஓர் இளம் பெண் செப்டெம்பர் 20-ம் திகதி இரவு என் வீட்டுக்கு வந்து தங்குவதற்கு இடம் கேட்டாள். அவள் என் வீட்டில் தங்குவதை நான் விரும்பவில்லை. அவளை இன்ஸ்பெக்டர் ஜோகரன் வீட்டில் ஒப்படைத்தேன். முறைப்பாட்டுக்காரரின் சகோதரனாலேயே அந்தப் பெண் கூட்டிவரப் பட்டிருக்கிறார் என்பதை இன்ஸ்பெக்டர் விசாரித்து அறிந்தார்."

களுத்துறை, பலத்தோட்டையைச் சேர்ந்த அநுரா விஜயரத்ன என்பவர் களுத்துறை மாஜிஸ்திரேட் முன்னிலையில் மேற்கண்டவாறு சாட்சியமளித்தார்.

இவ் வழக்கில் மொனிக்கா தன்னங்கரா என்பவரின் வீட்டிற்குள் அத்துமீறிப் பிரவேசித்து, அவளை மானபங்கப்படுத்தியதாக பிரஸ்தாப சாட்சி மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

சாட்சி மேலும் கூறியதாவது:—

"பலாத்தோட்ட சுவாரிஸ் வத்தையில் வசிக்கிறேன். கடந்த ஏழு வருடங்களாக அரசாங்க சேவையில் இருக்கிறேன். முறைப்பாட்டுக்காரருக்கு நான் எத்தகைய தீங்கும் செய்யவில்லை."

பன்விலகமகே ரோஸலின் சாட்சியம் அளிக்கையில், மனுதாரின் வீட்டின் மேல் எதிரி கற்களை வீசுவதைத் தான் கண்டதாகவும், இது பெப்ரவரி 8-ந் திகதி நடந்ததாகவும் கூறினார்.

மேல் விசாரணை ஆகஸ்ட் 7-ம் திகதி வரை ஒத்திவைக்கப் பட்டது. (ஐ-15)

### காதணியைக் கொடுக்க மறுத்ததால் கத்திக்குத்து

காதணிகளைக் கழற்றிக் கொடுக்க மறுத்ததால் ஆத்திரமுற்ற ஒருவர், தனது ஆசைநாயகியை ஏழு முறை கத்தியால் குத்தினாராம்.

இவ் வழக்கில், மருதானை வித்தியாலங்கார மாவத்தையைச் சேர்ந்த பிரின்ஸி பெரேராவைக் குத்தி கொலை செய்ய முயன்றதாக புள்ளர்ஸ் வீதியைச் சேர்ந்த லத்திப் முகமது சித்திக் குற்றம் சாட்டப்பட்டுள்ளார்.

கொழும்பு பிரதம நீதவான் முன்னிலையில் இவ்வழக்கு விசாரிக்கப்பட்டது.

சம்பவம் நடைபெற்ற அன்று எதிரியின் ஆசைநாயகி பிள்ளைகளைப் பாடசாலையிலிருந்து கூட்டிவர நேரமாகிவிட்டது. இதனால் வாக்குவாதம் ஏற்பட்டதாம். பின் அடைவு வைப்பதற்கு காதணிகளைக் கேட்டார். கொடுக்க மறுத்த அப் பெண், அவைகளைக் கழற்றி சட்டைக்குள் ஒழித்துக் கொண்டாள்.

ஆத்திரமுற்ற எதிரி கிறிஸ் கத்தியால் அவளை ஏழு முறை குத்தி விட்டாராம்.

இவ்வாறு நீதிமன்றத்தில் கூறப்பட்டது.

மேல் விசாரணை இம் மாதம் 23-ந் திகதி வரை ஒத்திவைக்கப் பட்டது. (ஐ-15)

### இதனை நிறுத்தவும்

டாக்ஸி மீட்டர் கொள்ளையை நிறுத்துவதற்கு மக்கள் அரசு விரைவில் முனைதல் வேண்டும். எத்தனையோ விதமான ஏய்ப்புகளை டாக்ஸிச் சாரதிகள் பலர் கையாள்கிறார்கள். அந்தரத்துக்கு, அவசரத்துக்கு அவற்றைக் கூலிக்கு அமர்த்தும் ஏழைமக்கள் தம் பணத்தைப் பறிகொடுத்துத் தவிக்கிறார்கள். தேசிய அரசின் ஆட்சிக் காலத்தில் நாம் இதைப் பலதடவை எடுத்து வற்புறுத்தியும் அதன் செவிகளில் ஏறவில்லை. இந்த அநியாயத்தை இன்னும் தொடர்ந்து நீடிக்கவிடாமல் முற்றுப்புள்ளி வைத்தல் வேண்டும். மோட்டார் கமிஷனர் பகுதியோ, பொலீஸோ இதில் தலையிடுவதாகத் தெரியவில்லை.

தந்தி

### பிர்லா தூதுக் கோஷ்டி ஆஸ்திரேலியா செல்கிறது

கோலாலம்பூர், ஜூலை. 19

இந்தியாவின் தலைசிறந்த பிர்லா கைத்தொழில் ஸ்தாபனம் ஐவர் கொண்ட ஒரு தூது கோஷ்டியை ஆஸ்திரேலியாவுக்கு அனுப்பியுள்ளது. அங்கு முதலீடு செய்வது பற்றி அது ஆராயும்.

புதுடில்லியிலுள்ள ஆஸ்திரேலிய தூதுவரின் அழைப்பின் பேரிலேயே இக்கோஷ்டி போவதாக அதிபர் திரு. கே. கே. பிர்லா கூறினார்.

"அலுமினியம், விஸ்கோஸ் பைபன் உற்பத்திபோன்ற அநுபவ ரீதியான வற்றில் தான் நாம் முதலீடு செய்வோம். இது ஆராய்வுக் கட்டம்" என அவர் மேலும் கூறினார்.

மலேஷிய அரசாங்க விருந்தினராக திரு. பிர்லா இங்கு வந்துள்ளார். கூட்டு முயற்சியில் 180 லட்சம் டாலர் செலவில் ஒரு பெரிய ஜவுளித் தொழிற்சாலையை பிர்லா ஸ்தாபனம் இங்கு அமைக்கவிருக்கிறது. இதில் பிர்லாவுக்கு 40 வீத பங்கு இருக்கும். (ஐ-15)


தந்தி
சிறு விளம்பரங்கள்

வசியம்

காதலில் வெற்றியை எதிர் பார்ப்பவர்களுக்கு தவறாத மலையாளி வசிய பரிகாரம். மூன்று நாட்களில் பலன் கிடைக்கும். இருவரின் பெயர்களுடன் இலவச விபரங்களுக்கு எழுதுங்கள்: சிவபாலன், குப்த வித்தியாதனய, ஊருப்பொல.

R. 68317

சக்தி கவசம்

காதலில் தோல்வியா? வியாபாரத்தில் நட்டமா? தொழிலில் முன்னேற்றம் இல்லையா? எஜமானர் அன்பு குறைவா? குடும்பத்தில் பிணக்குமா? மூன்றே நாட்களில் பலன் கிடைக்கும். சம்பந்தப்பட்டவர் பெயருடன் இலவச விபரத்திற்கு இன்றே எழுதுங்கள். சக்தி மந்திர், வெலிக்கடமுல்லை, வத்தளை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரவில் வருவேன் என்று எழுதியிருந்தார்

# அவர் வருவதற்கு முன் கன்னியாக இருந்தேன்

### தாபரிப்பு வழக்கில் இளம்பெண் சாட்சியம்

அம்பலாங்கொடை, ஜூலை 19

"எதிர் மனுதாருடன் முதன் முறையாக உடலுறவு கொண்டபோது நான் கன்னி கழியாதவளாக இருந்தேன். அன்று இரவு என்னிடம் வருவதாக கடிதம் எழுதியிருந்தார். அவரை வரவேற்க நான் ஆயத்தமாய் இருந்தேன்."

நெல்லிகொட், அகுங்கலையைச் சேர்ந்த கிராமத்துக் கட்டழகி எஸ். டபிள்யூ. டிஸ்லின் டீ சில்வா, பலப்பிட்டிய நீதவான் முன் சாட்சியமளிக்கையில் மேற்கண்டவாறு கூறினர்.

தனது இரண்டு வயது மகள் தீபா பிரியந்திக்கு ரூ. 50 தாபரிப்பு கட்டும்படி, அரசாங்க அச்சகத்தில் வேலை செய்யும் குருசிங்க விவினிஸ் அல்லது மஹிந்தா குருசிங்க என்பவருக்கு எதிராக இவ் வழக்கை மேற்படி பெண் தாக்கல் செய்திருந்தாள்.

டிஸ்லின் டீ சில்வா தனது சாட்சியத்தில் மேலும் கூறியதாவது:-

"அன்று இரவு எனது சகோதரி பத்மினியுடன் நான் படுக்கவில்லை. அவளைக் கூடத்தில் படுக்க விட்டேன். இரவு 11 மணியளவில் எதிரி பின் கதவில் தட்டினர். விளக்கை குறைத்து விட்டு, கதவைத் திறந்தேன். அந்நேரம் அவர் ஏன் வந்தார் என்று தெரியாது. என்னைத் திருமணம் செய்தாலொழிய அப்படி வரவேண்டாம் என்று கூறினேன். திருமணம் செய்வதாக வாக்குறுதி கூறிவிட்டு, என்னுடன் உடலுறவு வைத்தார். எதிரியை எனக்கு நான்கு வருடங்களாகத் தெரியும்.

"1967 அக்டோபரில் அவர் என் வீட்டுக்கு வந்தார். அவரை எனக்குத் திருமணம் பேசினர். தான் கட்டும் வீட்டின் வேலைகள் முடிவுற்றதும் திருமணம் செய்வதாகக் கூறினர். அவருடைய சகோதரியின் காணி என் வீட்டருகில் உண்டு. அங்குள்ள கொட்டிலில் அவர் வசித்தார்.

"என்னிடம் புத்தகங்கள் வாங்குவார். காதல் கடிதங்களை அதற்குள் வைத்து பரிமாறிக் கொள்வோம். 1968 ஆகஸ்ட் 15-ந் திகதி அன்றுதான் நான் அவருடன் முதல் முறையாக உடலுறவு வைத்துக் கொண்டேன். கிழமையில் மூன்று நாட்கள் என்னுடன் உடலுறவு கொள்வார்.

"அக்டோபரில் எனது உடம்பில் மாற்றம் தோன்றவே, எனக்கும் அவருக்கும் ஏற்பட்ட தொடர்பு பற்றி தாயாரிடம் கூறினேன்.

"எனது தாயார் கேட்டதற்கு, மணம் முடிப்பதாகக் கூறினர். ஆனால் அதன் பிறகு அவர் வருவதை நிறுத்தி விட்டார். எனவே என் தந்தை கிராம சேவகரிடம் முறையிட்டார்.

"அதன் பிறகு, நான் மூன்று மாத கர்ப்பிணியாய் இருக்கும் போது அவர் என்னிடம் வந்தார். என் வீட்டார் அவரைப் பிடித்துக் கொண்டனர். அவர் சத்தம் போட, அயலார் அவரைக் காப்பாற்றினர்" எனக் கூறினள்.

மகள் தீபா பிரியந்திக்கு மாதம் ரூ. 50 தாபரிப்பு கட்டும்படி நீதவான் எதிரிக்கு உத்தர விட்டார். (ஐ-15)

### கன்னமிட்டு திருடியவருக்கு இரண்டரை வருடம் சிறை

"நீ செய்த குற்றங்கள் மிகவும் பாரதூரமானவை- 60 வயது வயோதிப மாதும், 18 வயது இள மங்கையும், கல்யாணமான ஒரு பெண்ணும் இருந்த வீட்டை உடைத்து அலுமாரியில் இருந்த நகைகளைத் திருடி விட்டாய்"

எச்- சோமதாஸ என்பவருக்கு இரண்டரை வருடக் கடுங்காவல் தண்டனை விதிக்கையில், கொழும்பு மேலதிக மாவட்ட நீதிபதி திரு- எல்- சமரதுங்கா மேற்கண்டவாறு கூறினர்-

தலாகேனவிலுள்ள மங்களிகா பெரேரா என்பவரின் வீட்டை உடைத்துத் திருடியதாக எதிரி மீது குற்றஞ் சாட்டப்பட்டு இருந்தது- குழப்பம் விளைவித்து, திருடியது முதலிய ஐந்து குற்றங்களில் அவர் குற்றவாளியாகக் காணப்பட்டார்-

மங்களிகா பெரேரா சாட்சியமளிக்கையில் கூறியதாவது-

"சம்பவம் நடைபெற்ற இரவு நானும் எனது கணவர் இர்வின் பெரேராவும் நித்திரையில் இருந்தோம்- நான்கு அல்லது ஐந்து பேர் வீட்டுக்குள் புகுந்தனர்- ஒருவர் என் கழுத்தில் பிடித்தார்- நான் கத்தியவுடன் கிரிஸ் கத்தியால் என் தலையில் அடித்தார்- எனது கணவரை இழுத்து தரையில் வீழ்த்தினர்- அதன்பின் அலுமாரியை உடைத்து ரூ-3,200 பெறுமதியான நகைகளைத் திருடிச் சென்றனர்- என்று கூறினள்-

எதிரி தனது சார்பில் தானே வாதாடினர்- (ஐ-15)

### வெட்டப்பட்டு இறந்து கிடந்தார்

உடம்பில் 12 வெட்டுக்காயங்களுடன் பொடி மஹாத்மயா என்பவர் இறந்திருக்கக் காணப்பட்டார்.

இது சம்பந்தமாக கல்கிசைப் பொலீசார் ஜஸ்டின் அல்பொன்ஸ், ஏ. எல். ஏ. ஷிமானிஸ் ஆகிய இருவரையும் கொழும்பு தெற்கு நீதவான் திரு. கொலின் மெண்டிஸ் முன்னிலையில் ஆஜர் செய்தனர்.

குருவிட்டியைச் சேர்ந்த டி. ஏ. பொடி மஹாத்மயாவை, இரத்மலானை பொருபான என்னும் இடத்தில் உள்ள ஒரு வீட்டில் வைத்து கொலை செய்ததாக இவர்கள் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது. (ஐ-15)

### துகிலுரி சண்டை

மாவனல்லை, ஜூலை 18

நடுத்தெருவில் இரு பெண்களுக்கு இடையில் மூண்ட சண்டையில் ஒரு பெண்ணின் சேலை உரியப்பட்டு அவர் வீதியில் ஓடிய சம்பவம் ஒன்று இங்கு நிகழ்ந்தது-

இரு பெண்களும் ஒருவர் உடையை மற்றவர் உரிந்து சண்டை செய்தனர்- சண்டையின் உச்சக் கட்டத்தில் சேலையை மற்றவரிடம் விட்டு வீதியில் ஓடினர் ஒருபெண்- இதை வேடிக்கை பார்த்துக்கொண்டு இருந்தவர்கள் கை கொட்டிச் சிரித்தனர்- (ஐ-202)

### அப்துல்ஹை சொற்பொழிவு

கொழும்பு ஆஸ்பத்திரி தெருவில் அகில இலங்கை முஸ்லிம் லீக் மண்டபத்தில் நாளை 20-ம் தேதி "இன்றைய முஸ்லிம்களின் மறுமலர்ச்சி" பற்றி "மறுமலர்ச்சி" வார இதழின் துணை ஆசிரியர் ஜனாப் எஸ்- யூ- அப்துல் ஹை உரை நிகழ்த்துவார்-

இலங்கை முஸ்லிம் லீக் செனட் சபையின் ஆதரவில் நடைபெறும் இந்தக் கூட்டத்துக்கு அல்ஹாஜ் எஸ்- இஸட்- எம்- மஷூர் மௌலானா தலைமை வகிப்பார் (ஐ)


## பாரிசவாதம் அல்லது போலியோ

போன்ற கொடிய வியாதிகளையிட்டும் அநேக காலமாக பலவிதமான மருந்துகளை செய்தும் குணப்படாது மனம் வேதனை அடைந்து எவ்வளவு காலம் சென்ற கொடிய வாத நோய்களானாலும் சரியே. எங்கள் இராஜ வைத்திய அனுபவங்களின் மூலம் ஒரு லட்சத்துக்கு மேற் கொண்ட வியாதியஸ்தர்களை குணப்படுத்தி கைகண்ட

## பாரிசவாத தைலம்

கீழ்க் குறிப்பிட்ட வியாதியஸ்தர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம் — தங்களின் வியாதிகளுக்கு இன்றே உபயோகித்து பூரண சித்தியடையுங்கள். தீரும் வியாதிகள் சகல வகைப்பட்ட பாரிஸ வாதம், இளம்பிள்ளை வாதம், முடக்கு வாதம், நடுக்கு வாதம், பச்சை வாதம், பக்க வாதம். அண்ட வாதம், இடுப்பு வாதம். குடல் வாதம், நெஞ்சு அல்லது மாரடைப்பு, மொளிகளில் வீக்கம், கற்தழும்பு. குதிக்கால் நரம்புகள் வலி, வீக்கம், உடம்பில் பற்பல ஊரல்கள். சொறி, சிரங்கு, அல்லது குட்டிகள், கடிவேகம், புழு மேய்ச்சல், உடம்பில் கரும் புள்ளிகள், வெள்ளை படருதல். சிறுவர்களுக்கு கைகால் உறுப்புகள் பலஹீனம், முடக்கும், சோர்வு, கழுத்து, முதுகந்தண்டு, இடுப்பு பலஹீனம். தசை கரைந்து, கணுக்குக் கணு வீக்கம், முடக்கம் போன்ற போலியோ நோய்களையும் மேற்படி மேலே குறிக்கப்பட்ட எவ்வித கடினமான நோய்களையும் ஏழு தினம் சிகிச்சையின் பின் குணம் காண்பீர்கள்:— சகல விபரங்களையும் மருந்துடன் அனுப்பி வைப்போம். நேரிலும் அல்லது வி. பி. பி. தபாலிலும் பெற்றுக் கொள்ளலாம்.

12 அவுன்ஸ் போத்தல் ஒன்றுக்கு ரூ. 100/-, 6 அவுன்ஸ் ரூ. 50/-
2 அவுன்ஸ் ரூ. 20/-. தபால் செலவு சதம் -/90.

## இழந்த சக்தியை மீண்டும் பெறுவதற்கு

## ரிஷி மன்மதன ஹல்வா

இன்றே சாப்பிடத் தவறாதீர்கள்

தெரிந்தும் தெரியாமலும் துர்ப்பழக்க வழக்கங்களில் ஈடுபட்டு தனது சக்தியை இழந்து அவதிப்படுவோர்களுக்கும் கொடிய கனவுகளால் தனது சக்தியை இழந்து இத்தன்மையான வகையில் நீர் வியாதிகள் ஏற்பட்டு நீர், சீனி போகுதல், மாவு, வெண்ணெய் போன்ற வகையில் வெளியாகி இளைப்பு, இருமல். சோகை, மூட்டு வலிகள், அல்லது வீக்கம் ஏற்பட்டு நரம்புத் தளர்ச்சியுண்டாகிய ஆண் - பெண் இரு சாரார்களுக்கும் இல்லற வாழ்க்கையில் வெறுப்பு ஏற்பட்டு உலகத்தில் ஜீவியம் செய்யவே விருப்பமில்லாமல் மனவேதனைப்படும் அன்பர்களுக்கு இதோ உங்களுக்குப் புத்துயிர் தந்து இன்புற்று வாழ எங்களின் ரிஷி மன்மதன ஹல்வாவை சாப்பிடுவீர்களானால் ஆச்சரியப்படக்கூடிய வகையில் உங்கள் வாழ்க்கையை பிரதிபலிக்கச் செய்யும் ஓர் அற்புத சஞ்சீவி இந்த ரிஷி மன்மதன ஹல்வா.

30 நாள் மருந்து ரூ. 40/-, 15 நாள் மருந்து ரூ. 20/-
தபால் செலவு -/70 சதம்

வி. பி. பி. தபாலில் பெற்றுக் கொள்ளலாம்-

கடந்த 787 ஆண்டுகளாக கண்டி பூர்வீக மன்னர்களுக்கும், பல லட்சக்கணக்கான வியாதியஸ்தர்களுக்கும் பரம்பரை, பரம்பரையாகச் சிகிச்சை செய்து அளவற்ற பல நற்சாட்சிப் பத்திரங்கள் பெற்றுவரும் இராஜ வைத்தியர் வைத்தியரெத்தின முதலியார் அவர்கள் வகை.

**ஏ. எல். எம். ஜே. டி. உடையார்,**
வாத ரோக நிபுணர், இராஜ வைத்தியர்,
மடவலை பஜார், கண்டி.



## கோபால் பல்பொடி

பற்களுக்கு வெண்மை தந்து பல் வியாதிகளைக் குணப்படுத்துகிறது. இந்தியாவிலும் இலங்கையிலும் விற்கப்படுகிறது.

**S. P. S. ஜெயம் அன் கோ.**
மதுரை - கொழும்பு

விற்குமிடம்:-
34, செட்டியார் தெரு,
கொழும்பு - 11.

தபால் பெட்டி: 1298.
தொலைபேசி எண்: 26584





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### எல்லோர் கவனமும் நவ அரங்க சாலை மீது

# அரசமைப்பு நிர்ணய சபை இன்று உதயம்

**இலங்கையை பரிபூரண சுதந்திர, சோஷலிஸ ஜனநாயகக் குடியரசாக்குவதற்கு வேண்டிய அரசமைப்புச் சட்டத்தை உருவாக்க நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட அரசமைப்பு நிர்ணய சபை இன்று உதயமாகிறது. இதன் மூலம் அரசியலில் புதிய சகாப்தம் ஆரம்பமாகிறது.**

சரித்திர காலந்தொட்டுத் தன்னாட்சி நடத்திவந்த இலங்கை, இடையில் அந்நியரின் கையில் சிக்கி, 133 ஆண்டுகளாக அடிமைப்பட்டுக் கிடந்துவிட்டு, 1948-ல் சுதந்திரம் அடைந்தபோதிலும், தலைநிமிர்ந்து சொந்தக் காலில் நிற்கத் துணை செய்யும் வகையில் அது தனக்கென ஒரு அரசமைப்பை ஆக்கிக்கொண்டதில்லை.

அந்தக் குறையைப் போக்கி, புத்தம் புதிய அரசமைப்பு ஒன்றை ஆக்கி நாட்டைச் சர்வசுதந்திர குடியரசாக்குவதற்கே உலகில் இதுவரை எங்குமே நடைபெறாத வகையில் இங்கு இன்று முதல் முயற்சி செய்யப்படுகிறது. அதாவது கொழும்பு நவ அரங்க சாலையில் அரசமைப்பு நிர்ணய சபை கூட்டப்படுகிறது.

சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த இந்தக் கூட்டத்தில் எல்லா அரசியல் கட்சிகளையும் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் (157) கலந்துகொள்கிறார்கள். அவர்கள் முன்னிலையில் பிரதமர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவால் அரசமைப்பு நிர்ணய சபையைத் தோற்றுவிப்பதற்கான பிரேரணை கொண்டுவரப்படுகிறது.

இந்த நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வதற்கு நீதியரசர்கள் கல்விமான்கள், மதத் தலைவர்கள் தொழிற் சங்கப் பிரமுகர்கள், உள்ளூராட்சி மன்றத் தலைவர்கள் உட்பட 1500 பேருக்கு அரசாங்கம் அழைப்பு அனுப்பி உள்ளது- அரசியல் அமைப்பு விவகார அமைச்சினால் இவ் அழைப்புகள் அனுப்பப்பட்டுள்ளன.

அரசியல் அமைப்பு நிர்ணய சபைக் கூட்டத்தையிட்டு பொலீஸார் விசேஷ பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு உள்ளார்கள்-

நவ அரங்கசாலை மண்டபத்தை சுற்றியுள்ள வீதிகள் எல்லாம் வாகனப் போக்குவரத்திற்கு தடை செய்யப்பட்டுள்ளதாக பொலீசார் அறிவித்துள்ளனர்.

இவ் வீதிகள் வழியே இ. போ. ச. பஸ்களும், விசேஷ "லேபல்" தாங்கிய வாகனங்களும் அவ் வீதிகளில் வசிப்போரின் வாகனங்களும் மாத்திரம் போய் வருவதற்கு உத்தரவு வழங்கப்படும்.

அழைப்பு அனுப்பப்பட்டவர்கள் தமது வாகனங்களை மண்டப வளவுக்குள் கொண்டுசெல்ல அனுமதிக்கப்படமாட்டார்கள்.

இக் கூட்டத்தில் கலந்து கொள்ளும் ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் இதை ஆதரித்து உரையாற்றுவதுடன் அரசாங்கத்திற்கு ஆதரவாகவே வாக்களிப்பதெனவும் முடிவு செய்துள்ளார்கள்.

தமிழரசு, தமிழ் காங்கிரஸ் உறுப்பினர்களும் இக் கூட்டத்தில் கலந்து கொள்வர். தமிழரசுக் கட்சி உறுப்பினர்கள் தாம் இப் பிரேரணைக்கு எதிர்ப்புத் தெரிவிப்பதுடன். எதிர்த்தே வாக்களிப்பதெனவும் முடிவு செய்துள்ளார்கள்.

அரசமைப்பு நிர்ணய சபை நாளையும், நாளை மறுதினமும் மீண்டும் கூடும். ஆனால் இந்தக் கூட்டம் நாடாளுமன்றத்தில் நடைபெறும். (ஐ)

## ரயில்-பஸ் மோதல் பற்றி விசாரணை செய்ய கமிட்டி

பாலாவியில் நடந்த பஸ் - ரயில் கோர விபத்துபற்றி பூரண விசாரணை நடத்த கமிட்டியொன்றை நியமிப்பது என போக்கு வரத்து அமைச்சர் திரு. லெஸ்லி குணவர்தன தீர்மானித்து உள்ளார்-

இவ் விபத்தில் கொல்லப்பட்டோரின் எண்ணிக்கை இப்போது 14 ஆக உயர்ந்துள்ளது.

புத்தளம் பகுதியில் நடைபெற்ற கோர விபத்து இதுவென வர்ணிக்கப்பட்டது- இவ் விபத்தை நேரில் கண்ட பலர் பொலீஸில் வாக்கு மூலம் அளித்துள்ளனர்.

விபத்துக்குள்ளான பஸ்ஸில், தனது 5 வயது மகளுடன் பிரயாணம் செய்து காயம் அடைந்த 42 வயதுடைய திருமதி எமலின் பெரேரா என்னும் பெண் தெரிவித்திருப்பதாவது:-

"ரயில் கடவையை பஸ் நெருங்கிக் கொண்டிருக்கையில் எதிரே வரும் ரயிலின் "விசில்" சப்தம் கேட்டது. பஸ்ஸைச் செலுத்த வேண்டாமென்று நானும் ஏனைய பிரயாணிகளும் பயத்தால் சப்தமிட்டோம்.

"ஆனால், தனது ஆசனத்துக்குப் பின்னால் முன் ஆசனத்தில் உட்கார்ந்திருந்த ஒரு நடுத்தர, தடித்த பெண்ணுடன் கதைத்துக் கொண்டு பஸ்ஸை செலுத்திக் கொண்டிருந்த சாரதி பிரயாணிகளின் கூச்சலைக் கவனியாது பஸ்ஸைச் செலுத்தினார்.

பிரயாணிகளின் கூச்சலை அவர் கவனித்திருப்பாரானால் பஸ்ஸை நிறுத்தப் போதிய அவகாசம் இருந்தது."

சிலாபம் ஆஸ்பத்திரியில் காயங்களுடன் அனுமதிக்கப்பட்டிருக்கும் பஸ் கண்டக்டரான தே. ஏ. குலசிங்ஹ, திருமதி பெரேராவின் கூற்றை ஒப்புக்கொண்டார்-

பொலீஸாருக்கு அவர் அளித்த வாக்கு மூலத்தில், பிரயாணிகள் சாரதியை எச்சரிக்கை செய்ததாகவும் ஆனால் பிரயாணிகளின் எச்சரிக்கையையோ அல்லது ரயிலின் விசில் சப்தத்தையோ சாரதி கேட்கவில்லையென கூறுவதற்கு எக்காரணமும் இல்லையெனவும் தெரிவித்துள்ளார்.

இவ் விபத்தில் கொல்லப்பட்டோர் வருமாறு:- எம். எம். மஜீது, பி. அகமது ஹூசேன், ஏ. டி. வர்லியானு, எஸ். டி. மரிக்கார், லயனல் ஆனந்த கீர்த்தி, டபிள்யூ. கே. குணதிலக, எச். ஜி. மரியநோனா, கே. விமலாவதி, மேரி மார்கிறட், நைனா முகம்மது, நிஹிதஹீர். (ஐ)

## மது அருந்திச் சென்றவர் எப்படி மரணமானார்?

மனுவாங்கமைவைச் சேர்ந்த நாற்பது வயது ஆறுமுகம் மாணிக்கம் என்பவர் மது அருந்திய பின்னர் இறந்துள்ளார்.

இவரது மரணம் சம்பந்தமாக விசாரணை நடத்திய சிலாபம் திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. காதர் அப்துல் லத்திப் கான் முன்னிலையில் சாட்சியமளித்த இறந்தவரின் மனைவியான காலுகே அகி நோனா தெரிவித்ததாவது:-

"எனது கணவர் ஒரு தொழிலாளி. எமக்கு பிள்ளைகள் ஒருவரும் இல்லை.

"இரு வாரங்களுக்கு முன்னர் எனது கணவரை நச்சுப் பாம்பு ஒன்று தீண்டியிருந்தது. இதற்காக வைத்திய சிகிச்சை பெற்று வந்தாராயினும் அவர் பூரண குணமடையவில்லை.

"எனது கணவரைப் பாம்பு தீண்டியதன் சில நாட்களின் பின்னர் அவரது சகோதரி காலமாகி விட்டார். இதனால் மனமுடைந்த அவர் கவலைகளை மறப்பதற்காக சிறிது மது அருந்தினார்.

"மது அருந்திச் சில மணித்தியாலங்களின் பின்னர் அவர் என்னிடம் வந்து தனக்கு சுவாசிப்பதில் கஷ்டமும் கடும் வலிப்பும் உள்ளதாகத் தெரிவித்தார்.

"இதற்குத் தகுந்த சிகிச்சை அளிக்கும் முன்னரே அவர் என்னை விட்டுப் பிரிந்து விட்டார்" என்றார். (ஜ-7)

## மீனவர் மரணம்

மன்னார், ஜூலை 18

நான்கு நபர்களால் கொடூரமாகத் தாக்கப்பட்டவரெனக் கூறப்படும் ஏழை மீனவர் ஒருவர் பரிதாபமாக மரணமானார்.

இக் கொலைச் சம்பவம் எருக்கலம்பிட்டி கடற்கரையில் நடந்துள்ளதாகக் கூறப்படுகின்றது. கடந்த வார நடுப்பகுதியில் நடைபெற்ற இத் தாக்குதல் சம்பவத்தினால் கே. எம். அப்துல் காதர் என்ற நான்கு பிள்ளைகளின் தந்தையே மரணமானார்.

இவரைத் தாக்கிய நபர்கள் எனக் கூறப்படுபவர்கள் இன்னும் கண்டு பிடிக்கப்படவில்லை. மன்னார் பொலீசார் விசாரணை செய்து வருகின்றனர். (ர-185)

## கோல்டா மெயர் யு.எஸ்.செல்வார்

ஜெருசலம், ஜூலை 18

இஸ்ரவேல் பிரதமர் திருமதி கோல்டா மெயர் எதிர் வரும் செப்டம்பர் மாதம் அமெரிக்காவுக்கு விஜயம் செய்யக்கூடிய சாத்தியக் கூறுகளைப் பற்றி பரிசீலனை செய்து வருகிறார். (5)

## கணவனின் குடிப்பழக்கம் விவாகரத்தில் முடிந்தது

கணவனின் குடிப்பழக்கமும், சூதாட்ட ஆசையும் விவாகரத்தில் முடிந்துள்ளது.

தெஹிவளையைச் சேர்ந்த 32 வயதான எச். எல். பிரேமாவதிக்கு அவரது கணவன் டீ. ஜயசேனவிடமிருந்து விவாகரத்து வழங்கப்பட்டது.

கொழும்பு மேலதிக மாவட்ட நீதிபதி முன் இவ்வழக்கு விசாரிக்கப்பட்டது.

பிரேமாவதி சாட்சியம் அளிக்கையில் கூறியதாவது:-

"1951 நவம்பர் 29-ல் திருமணம் செய்தோம். குழந்தைகள் இல்லை- காலியில் வசித்து வந்தோம். சில காலத்தின் பின் என் கணவர் குடிக்கவும், சூதாடவும் தொடங்கினார்.

"இதனால் சண்டை சச்சரவுகள் ஏற்பட்டன. 1968 டிசம்பர் 10-ல் என்னை விட்டுச் சென்றவர் இன்று வரை திரும்பி வரவே இல்லை. எனவேதான் விவாகரத்து கோரினேன்" என்று கூறினார். (ஐ-15)


தொழிலா? வியாபாரமா? காதலா?

**கவலை வேண்டாம்...**

உங்கள் பிரச்சினை எதுவானாலும் சரி, உங்கள் வாழ்க்கை மறுமலர்ச்சியடைந்து, வியாபாரத்தில் லாபம் பெற்று, தொழிலில் உயர்வடைந்து, வாழ்க்கையில் வெற்றியடைந்து குடும்பத்தின் தொல்லை நீங்கி வாழ்நாள் எல்லாம் இன்புற்று வாழ தினமும் காலையிலும், மாலையிலும் உங்கள் வீட்டிலோ, கடையிலோ

**ஸ்ரீ ராம வாசனைப் புகையை**

தவறாது பாவித்து பலன் அடையுங்கள்.

ஒரு மாத பாவனைக்கு ரூ. 3-25
மூன்று மாத பாவனைக்கு ரூ. 7-50

வி- பி- பி- ஓடர்கள் ஏற்றுக் கொள்ளப்படும்.

பரீட்சை, பந்தயம், வழக்கு மற்றும் செல்லும் இடமெல்லாம் வெற்றியை தரவல்லது.

**ஸ்ரீ சரஸ்வதி இராச யந்திரம்**

(விலை ரூ. 15/50 மட்டுமே)

வேறு எந்த காரணமாயிருந்தாலும் முழு விபரங்களையும் எமக்கு எழுதி தவறாத நிவர்த்தியைப் பெறுங்கள். வசியம் சம்பந்தப்பட்ட விஷயங்கள் விசேஷமாக கவனிக்கப்படும். காதலில் வெற்றி, பெற்றோரின் விருப்பம், நிச்சயமாக பெற்றுக் கொடுக்கப்படும். இருவர் பெயர்களுடன் இலவச விபரங்கட்கு எழுதுங்கள்.

அரசாங்க அனுமதிபெற்ற
மகா மாந்திரீகர்

**நீலன் கந்தசாமி,**

லக்ஸல கட்டிடம், நிட்டம்புவ.



இப் பத்திரிகையை அச்சிட்டவர் சுயாதீனப் பத்திரிகா சமாஜம், 5, குணசேனமாவத்தை, கொழும்பு - 12 (இலங்கை)- வெளியிட்ட திகதி 19 ஜூலை 1970
Thanthi 5, Gunasena Mawatha, Colombo 12.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org